BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

E - ISSN: 3139 -1893 An international open access, peer- reviewed, refereed journal

# அன்றும் இன்றும் கைம்பெண் வாழ்வியல் நிலைப்பாடுகள்

**முனைவர் கே. இரா. கமலாமுருகன்**

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, இராணிமேரி கல்லூரி, சென்னை –600004

மின்னஞ்சல்: Kamalamuruganhari@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

உலகில் ஆண், பெண் என்பதான இருவகையெனில் பெண்மை என்பதான உயிர் மட்டும் பல்வேறு நிலையில் இடர்பாடுகளை அடைந்து வருகின்றன. அவ்வகையான துன்பங்களில் நெடியதும் கொடியதும் கைம்மை நிலையாகும். அத்தகைய கொடிய சூழலை அன்றும் இன்றும் பெண்கள் எதிர்கொள்ளும் நிலைப்பாடுகளை ஆய்ந்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

**குறிச்சொற்கள்**

கைம்பெண், விதவை, விதவை மறுமணம், அன்றும் இன்றும், கைம்பெண் வாழ்வியல்

**முன்னுரை**

“பெண்மை வாழ்க வென்றுக் கூத்திடுவோமடா” என்று குடக்குடிலில் முழக்கமிட்டு வீட்டில் பெண்ணை விலங்கினுக் கீழாய் நடத்தி, கால்விலங்கிட்டது போல் உரிமைகள் பறித்து மேலுக்கு சிரியென்பார். பன்னெடுங் காலமாக உலகியல் வழக்கு இவ்வாறே உள்ளது. இத்தகைய உரிமை பறித்த உணர்வைக் கொல்லும் செயல்களில் ஒன்றாக தலைவிரித்தாடுவது “கைம்பெண்” கொடுமை. அத்தகைய கைம்பெண்கள் நிலைப்பாடு அன்றும் பெண்ணுரிமை பேசும் இன்றும் எவ்வாறான சூழலில் இயங்குகின்றன என்பதனை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

**கைம்பெண்**

கணவனை இழந்த பெண் “கைம்பெண்” என்று சுட்டப்படுகின்றாள். “விதவை” என்பதே எல்லோரும் மிகுதியும் பயன்படுத்தும் சொல்.

*1) ஆளில் பெண்டிர் (நற்.353),*

*2) கழிகல மகளிர் (புறம்.280),*

*3) பருத்திப்பெண்டிர் (புறம்.125),*

*4) தொடிகழி மகளிர் (புறம்.238),*

*5) கைம்மை (புறம்.125,261),*

*6)படிவமகளிர் (நற்.273),*

*7) உயவற்மகளிர் (புறம்.246)*

என்பன வழக்கில் இருந்ததை காணமுடிகிறது. இந்த நிலையில் தள்ளப்பட்ட பெண்ணுக்கு பல தடைகள் விதிமுறைகளாக நம்முடைய தமிழ்ச் சமூகத்தில் பன்னெடுங்காலமாகவே வழக்கில் உள்ளன. அதன்வழி கூந்தல் மழித்தல், உப்பில்லாத குப்பைக் கீரை உணவுகளை உட்கொள்ளுதல், கைம்மை நோன்பு நோற்றல், பிறர் பார்வையில் படுவதை தவிர்த்தல், தலையில் முக்காடு போட்டுக் கொள்ளுதல், மங்கள நிகழ்வுகளில் ஒதுக்கப்படுதல் என்று பல நடைமுறைகள் வழக்கில் உள்ளன. அதற்கும் மேலாக கணவனை இழந்த பெண், உடனடியாக உயிர் துறத்தல், அல்லது கணவனின் சிதையில் உடன் எரிதல், அல்லது சிதைமூட்டி வீழ்ந்து அழிதல் என்ற வழக்கங்களும் வாழ்வில் நடைமுறைப்படுத்தப்பட்டதனை வரலாறுகள் பேசுகின்றன.

**பழந்தமிழ் இலக்கியங்களில் "கைம்பெண்"**

தமழரின் வரலாற்றைப் பறைசாற்றும் மிகச்சிறந்த பதிவுகளாகப் போற்றப்படுவனவற்றில் சங்க இலக்கியங்கள் உள்ளிட்ட செவ்வியல் இலக்கியங்களைச் சுட்டலாம். அவ்வகையில்,

*"நிரை இவன் தந்து நடுகல், ஆகிய*
*வென்வேல் விடலை இன்மையின் புலம்பி*
*கொய்ம் மழித் தலையொடு கைம்மையறக் கலங்கிய*
*கழிகல் மகடூஉப் போலப்*
*புல்லென் றனையால் பல்லணி இழந்தே"*

*(புறம்.262)*

என்ற பாடலடிகளில் வாள்போரில் வீழ்ந்த வீரர்தம் மனைவியர் நிலைப்பாடு சுட்டுகின்றது.

மற்றுமொரு புறப்பாடல்,

*"மெய்ம் மறந்து பட்ட வரையாப் பூசல்*
*ஒள்நுதல் மகளிர் கைம்மை கூர*
*அவிர் அறல் கருக்கும் அம்மென்*
*குவை இருங் கூந்தல் கொய்தல் கண்டே"*

*(புறம்.25)*

என்ற பாடலடியில் படையெடுத்து பாண்டிய நெடுஞ்செழியன் எதிரிகளை வெல்ல முனையும் போரில் இறக்கும் வீரர்தம் மனைவியர் நிலைப்பாடு கூந்தல் கலைந்திடும் அவலம் சுட்டப்படுகின்றது. மற்றுமொரு புறப்பாடலும் இத்தகைய கூந்தல் களையும் நிகழ்வினைச் சுட்டும் வகையில்,

*"கூந்தல் கொய்து குறுந்தொடிநீக்கி"*

*(புறம்.317)*

என்று குறிப்பிடுகின்றது. கூந்தலுடன் பெண்களின் அணிகலன்களும் களையப்படும். அவற்றில் வளையல்கள், குறிப்பாக கண்ணாடி வளையல்கள் சடங்கில் சுட்டப்படுகின்றன. "தன் கூந்தலைக் கழித்து, வளையல்களை உடைத்து விட்டு, அல்லி இலையில் உணவினை தானும் எடுத்துக்கொண்டு, தன் மகவுக்கும் தந்து வாழும் கைம்மைத்தாயின் அவலச் சூழலை (புறம்.250) பதிவு செய்து காட்சிப்படுத்துகின்றது. இத்தகைய சூழலில் அந்தப் பெண்ணின் மனநிலையினை புறநானூற்றுப் பாடல்கள் (253,254,255,256) மேலும் சுட்டுகின்றன. இவற்றின் உச்சமாகவும், சாட்சியாகவும் பூதப்பாண்டியனின் மனைவி பெருங்கோப் பெண்டு தன் கணவன் இறந்துவிட்ட சூழலில் மன்னன் மனைவியாக நாட்டின் மகாராணியாக இருந்தாலும் கைம்பெண் சடங்கில் விதிவிலக்கில்லை என்பதை விளக்கி உரைத்து,

*"அணில்வரிக் கொடுங்கால் வாள்போழ்த் திட்ட*
*காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது*
*அடையிடைக் கிடந்த கைபிழி பண்டம்*
*வெள்ளள் சாந்தொடு புளிப்பெய்து அட்ட*
*வேளை வெந்தை வல்சி யாகப்*
*பரல்வெய் பள்ளிப் பாய் இன்றியும் வதியும்*
*உயவல் பெண்டீர் ...." (புறம்.246)*

என்ற பாடலில் விதவையான பெண்ணுக்கு விதிக்கப்படும் வாழ்வியல் சூழலை விளக்கி உரைத்துத் தீர்ப்பாய்ந்து இறந்தார். குறிப்பாக அப்போது அவர் மிகவும் இளமையாகவே இருந்தார் என்பதும் அறியப்படுகிறது.

*"மென்தோள் மகளிர் மன்றம் பேணார்"*

*(புறம்.373)*

என்ற பாடலடி பொது மன்றங்களுக்கும் விழாக்களங்களுக்கும் விதவையர் வருதல் கூடாது என்பதான சூழலைச் சுட்டுகிறது. உச்சமான இச்சூழல் விளக்கம் சங்க காலத்தில் இருந்த கைம்பெண் நிலைப்பாட்டை உணர்த்துகின்றன. இதன் காரணமாகவே சிலப்பதிகாரம்,

*"கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்"*

*(வழ.காதை.20:80)*

என்று எடுத்துரைத்து உயிர் நீத்த பாண்டிமாதேவியான கோப்பெருந்தேவியின் மனவலி உணர்த்தப்பட்டுள்ளது.

**இன்றைய கவிதைகள் பேசும் கைம்பெண் நிலைப்பாடுகள்**

காலம் மாறினாலும் கைம்பெண்களின் வாழ்வியல் சூழல் மாறவில்லை என்பதற்குச் சான்று இன்று பதிவாகும் இலக்கியப் பகிர்வுகள். இவற்றுள் சில கவிதைச் சான்றுகள் இங்கு உற்று நோக்கப்படுகின்றன.

பிறந்தது முதல் பூச்சூடி மகிழ்ந்த அவள் இனி வெறுங்கூந்தல் என்ற சடங்கினால் மனதில் ஏக்கத்துடன்,

*"பூக்களை மெதுவாய்த்*
*தொட்டாள், பெரு*
*மூச்செறிந்தாள் ......*
*கண்ணீர் சொரிந்து*
*பூக்களை நனைத்தாள்"*

*(அப்துல் ரகுமான், சொந்தச் சிறைகள், பக்.50-51)*

என்று அப்துல் ரகுமான் விதவையின் ஏக்கத்தைப் படலில் வடித்துள்ளார்.

இளம் விதவையர்கள் என்றால் அழகும் ஏக்கமும் சிலநேரம் அவளைத் தடம் மாறச் செய்வதும் உண்டு என்பதனை,

*“மீசை அரும்பாத இளம்வட்டம்*
*ஒருவனுடன் வெள்ளச் சேலையை ஒதுக்கியபடி*
*வெளியே வரும் சின்னத் தாஜ்மகால்*
*கிராமத்து இளம் விதவை”*

*(சிற்பி கவிதை வானம், சிரித்த முத்துக்கள், ப.159)*

எனக் கூறி அவள் எடுத்த விபரீத முடிவையும் கவிஞர் உணர்த்துகின்றார்.

*“கணவனை இழந்துவிட்டதால்*
*விதவைகள் .....*
*புலம்பத் தெரிந்த புஷ்பங்கள்*
*இந்த*
*அக்கினிப் பிரவேசங்களை*
*அகற்றுவது எப்போது?”*

*(மேத்தா, ஊர்வலம், ப.72)*

என்ற சிந்தனை எல்லோருக்கும் வரும்நிலை தான் இன்றைய தேவை என்கிறார் மு.மேத்தா.

*“தெருவில் பூக்காரி சத்தம்!....*
*அவிழ்ந்த கூந்தலை*
*ஆசையோடு வருடும்*
*அந்த இருபது வயது*
*இளம் விதவையின்*
*நெஞ்சில்*
*நெருப்புப் பொறியின் சத்தம்!”*

*(கோகிலாதங்கசாமி,காத்திருக்கிறாள் கண்ணகி.ப.12)*

என்னும் கோகிலா தங்கசாமியின் கவிதையும், விதவைகளின் நிலைமையை எடுத்துரைக்கின்றன.

*“கணவன் மரணம்*
*மனைவிக்கு விதவைக்*
*கோலக்காட்சி*
*தருகிறது – சகுனத்*
*தடையும் வருகிறது”*

*(சரளா இராசகோபாலன், மேகத்தின் தாகம், ப.93)*

என்று சரளா ராஜகோபாலன் விதவைக் கோலத்திற்கான காரணத்தை எண்ணிப்பார்க்கிறார்.

*“கோரிக்கை அற்றுக் கிடக்குதண்ணே*
*இங்கு வேரில் பழுத்த பலா”*

*(பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள். ப.90)*

என்று விதவையின் நிலையைப் பாவேந்தர் பாரதிதாசனும் எடுத்துரைக்கின்றார்.

தன் வீட்டுப் பெண்கள் தானே என்றெண்ணி அவர்களின் கண்ணீரைத் துடைப்பதற்குப் பதில் அவர்களின் மனம் வாடச் சில செயல்கள் செய்பவரும் உள்ளனர். மற்றவர் மட்டும் அல்ல பெற்றவரும்தான்.

*“நாளை*
*எனது தந்தைக்கு*
*அறுபதாம் கல்யாணம்,*
*ஆர்ப்பாட்டமான ஏற்பாடுகள்,*
*அதோ எனதருமை*
*விதவைத் தங்கை,*
*மூலையில் முக்காடிட்டு*
*மூக்கைச் சிந்தியபடி”*

*(சரவணன், இலக்குவெகு தொலைவில்தான், ப.32)*

என்று பெற்றோரே பெண்ணை ஒதுக்கும் நிலைமையைக் கவிஞர் சரவணன் பாடியுள்ளார்.

*“மாலையாகிட விரைந்தது*
*ஒரு மன்னவன் தோளுக்கு.....*
*மன்னவனைத் தொட்டவுடன்*
*உதிர்ந்தது*
*மலரல்ல....*
*மன்னவன்!*
*இதோ.......*
*இந்த ரோசா.....*
*வெள்ளை ரோசாவாய்...........!*
*தன்னுள் மலர்ந்த*
*இன்னும் இரண்டு மொட்டுக்களுக்காக........*
*இந்த வெள்ளை ரோசா.........*
*சிகப்பு வியர்வைகளைச்*
*சிந்தியபடி உலா வருகின்றது!*

*(கமலாமுருகன், வெள்.ரோஜா.ப.15)*

என்ற கவிதைகள் கைம்பெண் வலிகளைப் பதிவு செய்கின்றன. இன்றும் தொடரும் சிக்கல்களை இவை உணர்த்துகின்றன.

**இன்றைய சூழலியல் மாற்றங்கள் நிலைப்பாடு**

பழங்காலத்தில் கைம்பெண் கொடுமை என்பது ஏதோ அறியாதவர் காலமாக பெண்ணடிமைச் சூழல் மிக்க காலமாக எண்ணலாம். ஆனால் இன்று அவ்வாறான நிலை இல்லை அல்லவா? பெண் உரிமை பேசும் நிலை உயர்ந்தது.

நாகரீக மாற்றங்களும் பல பண்பாட்டுச் சிதைவுகளும் வளரும் சூழலில் பெண்கள் "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்" என்ற நிலையில் வந்த பின்னும் என்ன சூழல், என்றால் யாவும் பல நேரங்களில் வெற்று ஆரவாரங்கள்தான்.

*"முன்னொரு பிராயத்தில்*
*பூக்களின் அணிவகுப்பு மரியாதையைத்*
*தன் கூந்தலில் ஏற்றுக் கொண்டாள்.*
*இன்றும் தான் சூடுகிறாள்.*
*இதுதான்*
*விதவையல்ல வெளிக்காட்ட மட்டுந்தான்"*

*(இ.தே.கீ,ப.18)*

என்ற கவிதை இதன் சான்றாகின்றது. வெற்று அலங்காரங்கள், சிலருக்கு வெளிப்படுத்தத் தேவையற்ற சூழல் என சில அலங்காரங்கள் இன்று வழக்கமாகிவிட்டன. ஆனால் இவை மட்டும் கைம்பெண் சிக்கல்களைத் தீர்த்து விடுமா. விதவையர்க்கு மறுமணம் செய்யும் உரிமை வேண்டும். அவர்களுக்கு அலங்காரம் கூடாது என்ற கொடுமை தவிர்க்கப்பட வேண்டும்.

*"காவியாடைத் தரித்தவர்களே*
*கட்டுப்பாட்டை மீறும்போது*
*வெள்ளை ஆடைத் தரித்த*
*வெள்ளை உள்ளம்*
*வெளிப்படையாய் ஏன்*
*களிப்பு பெறக்கூடாது?*

*(இளங்கதிர், இதயங்கள் வெடிக்கின்றன, பக்.72-74)*

என்னும் கவிதை கைம்பெண்ணின் உணர்வுகளை வெளிப்படையாய் எடுத்துரைக்கின்றது. விதவையர்க்கு மறுமணம் அல்லது கல்வி, தொழிற்சார்பு இவைகளே அவர்களது துன்பம் தீர்க்கும் வழி என்ற கருத்துக்களைச் சமுதாயம் ஏற்கச் செய்யவேண்டும்.

பாரதி, பாவேந்தர் கூறிய மறுமணம், நடைமுறையில் ஏற்கப்பட வேண்டும். அரசு மற்றும் தனியார் அமைப்புகளின் நலத் திட்டங்கள் அளிக்கும் உரிமைகள் வந்து சேர வேண்டும். குறிப்பாக பெண்களை விதவை கைம்பெண் என்று சுட்டும் சமூகம் இத்தகைய மனைவியை இழந்த ஆடவர்க்கு தனிப்பெயர் தருவதில்லை. தவிர புதிய மாப்பிள்ளையாக பலருக்குப் பதவி உயர்வு கிடைக்கிறது. இவை சமதாயத்தில் உள்ள நோயின் அடையாளம்.

ஆகவே ஆண், பெண் எவராயினும் கைம்பெண் உணர்வுகளை, சூழலை மதித்து உதவிட முன்வர வேண்டும்.

**நிறைவுரை**

*"பெண்ணென்று பூமிதனில் பிறந்துவிட்டால்*
*மிகப்பீழை இருக்குதடி தங்கமே"*

என்ற அவலத்தின் உச்சத்தினை வெளிப்படுத்துவது கைம்பெண்களின் வாழ்வு, அன்று முழுதும் அவலம். இக்காலத்தில் "உள்ள அழுகிறான், வெளிய சிரிக்கிறான், நல்ல வேஷந்தான், வெளுத்து வாங்குறான்" என்ற பாடலின் சூழல். இந்நிலை மாற விதவையர் வாழ்வு என்றும் வளம்பெற திட்டங்களும், சட்டங்களும் போதாது. சில மனித மனங்களின் மாற்றமே கைம்பெண் வாழ்வில் ஏற்றம் தரும்!.

**உதவிய நூல்கள்**

1. அப்துல் ரகுமான், சொந்தச் சிறைகள், கவிக்கோ பதிப்பகம், சென்னை – 5, 1995
2. இளங்கதிர், இதயங்கள் வெடிக்கின்றன, பாரதி பதிப்பகம், வாழக்குட்டப்பட்டி, 2003
3. கமலாமுருகன், வெள்ளை ரோஜாவின் சிகப்பு வியர்வைகள், சீதை பதிப்பகம், சென்னை – 5, 2019
4. கோகிலா தங்கசாமி, காத்திருக்கிறாள் கண்ணகி, விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர், 1987
5. சரவணன், இலக்கு வெகு தொலைவில்தான், ஜனனம் பப்ளிகேஷன்ஸ், சென்னை- 11, 1969
6. சரளா இராசகோபாலன், மேகத்தின் தாகம், ஒளிப்பதிப்பகம், சென்னை – 8, 1985
7. சிலப்பதிகாரம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை – 17, 2012
8. சிற்பி, சிரித்த முத்துக்கள், திருமகள் நிலையம், சென்னை – 17, 1988
9. நற்றிணை, கழக வெளியீடு, திருநெல்வேலி, 1994
10. பாரதிதாசன் கவிதைகள், இராமையா பதிப்பகம், சென்னை – 5, 2018
11. புறநானூறு, கழக வெளியீடு, திருநெல்வேலி, 1994
12. மேத்தா, மு., ஊர்வலம், திருமகள் நிலையம், சென்னை – 17, 1998
13. வைரமுத்து, இன்னொரு தேசியகீதம், சூர்யா பதிப்பகம், சென்னை – 24, 1997